# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2334/19 - 2023 මැයි මස 30 වැනි අඟහරුවාදා - 2023.05.30

2334/ 19 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: PLDS/LND/04/ACQ/79.
உமது இல.: 4/3/9/2015/WS/172.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் பெல்மடுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் நவதுன் கோரளையில் உட பத்துவை சிறிய பிரிவில் இலக்கம் 166A உடதுல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இ.கி.வ. ர 323, துண்டு இலக்கம் 01 இன் கீழே விபரிக்கப்படும் காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

**துண்டு இல. 1 - காணியின் பெயர்: குட்டாபிடிய வத்த கிறிதிஎல்ல பாகம்; விபரம்: பெல்மடுள்ள நீர் வழங்கல் திட்டத்தின் உத்தேச நீர் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்படுகிறது; உரிமை கோருவோர்: 01. வணக்கத்துக்குரிய பெங்கமுவே தம்மதின்ன தேரர் - விகாரை அதிபதி, ஸ்ரீ பாத விகாரை மற்றும் கல்பொத்தாவெல ரஜ மஹா விகாரை. 02. பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் ஸ்தலம் - பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம், புலர்ஸ் ஒழுங்கை, கொழும்பு 07; விஸ்தீரணம்: 0.4173 ஹெக்டயார்.**

வடக்கு: வணக்கத்துக்குரிய பெங்கமுவே தம்மதின்ன தேரர் உரிமை கோருகின்ற குட்டாபிடிய வத்த கிறிதி எல்ல பாகம்; கிழக்கு: வணக்கத்துக்குரிய பெங்கமுவே தம்மதின்ன தேரர் உரிமை கோருகின்ற குட்டாபிடிய வத்த கிறிதிஎல்ல பாகம் மற்றும் வீதி; தெற்கு: வீதி மற்றும் வணக்கத்துக்குரிய பெங்கமுவே தம்மதின்ன

தேரர் உரிமை கோருகின்ற குட்டாபிடிய வத்த கிறிதிஎல்ல பாகம்; மேற்கு: வணக்கத்துக்குரிய பெங்கமுவே தம்மதின்ன தேரர் உரிமை கோருகின்ற குட்டாபிடிய வத்த கிறிதிஎல்ல பாகம்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பெல்மடுள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணித்துண்டுகளை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பி. எஸ். ஜி. ருவன்சிறி,
பிரதேச செயலாளர்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்.

பிரதேச செயலகம்,
பெல்மடுள்ள,
2023, மே 25.

EOG 05 - 0261